பேரவைத் தலைவரை நீக்கக் கோரும் தீர்மானம் விவாதிக்கப் படும்போது, பேரவைத் தலைவர் இருக்கையில் இருந்து நடத்துபவரை பேரவை அனுமதியுடன் நியமிப்பது குறித்து

[1974 மார்ச் 27

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) : இதிலே ஒழுங்குப் பிரச்னை ஒன்றும் இல்லை. நீங்கள் உட்காருங்கள். 'ஐ வோண்ட் அலவ் யு'. நான் எழுந்து நிற்கும்பொழுது நீங்கள் உட்கார வேண்டும். இந்த அவையின் பானல் ஆஃப் சேர்மனில் இருக்கிற யாராவது ஒருவரை உட்கார வைத்து அவையினுடைய அனுமதி கோரப்படுகிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மீது கொடுத்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள அவை அனுமதி அளிக்கிறதா என்பதைப் பார்ப்பதற்கு யார் உட்கார்ந்து இந்த அவையை நடத்தலாம் என்பது தான் பிரச்னை. பேனல் ஆஃப் சேர்மனில் யாராவது ஒருவர் உட்கார்ந்து நடத்தலாம் என்பதுதான் நம்முடைய சட்ட வழிமுறைகள். ஆகவே, இதில் ஒன்றும் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. இது குறித்து மேலும் பேசவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்த பானல் ஆஃப் சார்மனில் முதியவராக இருப்பவரை உட்காரவைக்கலாமா என்று நாங்கள் கருதினோம். அப்படிப் பார்த்தால் ஜோதி அம்மாள் அவர்களைத் தான் உட்கார வைக்க வேண்டும். அவரை உட்கார வைத்தால் 34 ஆகிவிடும். ஆகவே, மூத்தவர் இல்லாவிட்டால்கூட, அந்தப் பானல் ஆப் சார்மெனில் வரிசையாக வருவதில் முதல் வரிசையாக பெயர் துரைமுருகன் பெயர்தான் வருகிறது. ஆகவேதான் அவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். (சிரிப்பு).

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

(ஈ) பேரவைத் தலைவர் பார்வையாளர் மாடத்திற்கு அனுமதிச் சீட்டு வழங்காதது குறித்து.

திரு. ஏ. சுப்பிரமணியம் : 'ஐ ஆம் ரெய்ஸிங் எ பாயின்ட் ஆப் ஆர்டர். கொஞ்ச நேரத்திற்கு முன்பு 10-லிருந்து 11 மணிக்கு ஸ்பீக்கர் காலரிக்கு பாஸ் வேண்டும் என்று கேட்டேன். ஒரு மணி வரையிலும் எல்லா இருக்கைகளுக்கும் பாஸ் கொடுத்து முடிந்தாகிவிட்டது என்று சொன்னார்கள். இங்கே பார்த்தால் பல இருக்கைகள் காலியாக இருக்கின்றன. இதற்கு என்ன கூறுகிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

1974 மார்ச் 27] [திருமதி த. ந. அனந்தநாயகி]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே 35 பேர்களுக்கு இடம் இருக்கிறது. 35 பேருக்கும் பாஸ் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு அவர்களில் சில பேர்கள் வராமல் இருக்கக்கூடிய நிலைமை உண்டாகலாம். ஆகவே, இருக்கைகளின் கணக்குப்படி 35 பேர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஜோதி அம்மையாரை உட்காரவைத்தால் 34 பேர்களாகி விடும் என்று எதிர்க்கட்சியைக் குத்தலாகச் சொன்னார்கள். ஜோதி அம்மையாரை உட்கார வைத்தால் கூட நாங்கள் பார்வேர்டு பிளாக் 7 வோட்டுகளையும் வாங்கிவிடுவோம் என்பதை முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒருமுறை வாங்கிய பழக்கத்தில் சொல்கிறார்கள். இனிமேல் அது நடக்காது என்பதை உறுதியாகத் தெரிவித்து கொள்கிறேன். (சிரிப்பு).

திரு. ஏ. ஆர். பெருமாள்: அம்மையார் அவர்கள் மிக வேகமாக எழுந்து 7 பேர்கள் வோட்டுகளை வாங்கிவிடுவோம் என்று சொன்னார்கள். ஒரு வோட் கூட அம்மையார் வாங்க முடியாது என்பதைத் தெளிவாகச் சொல்லிக்கொள்கிறேன்.

(உ) பேரவைத் தலைவரைப் பதவி நீக்க அனுமதி கோரும் தீர்மானத்தைப் பேரவைத் தலைவரே பேரவையின் முடிவிற்கு விட்டிருக்கலாம் என்பது குறித்து.

THIRU K. T. K. TANGAMANI : Mr. Speaker, Sir, I only want to refer to an amendment made by the last Rules Committee, namely, 'the motion shall be taken up for consideration immediately after the Question Hour. So we feel that after Question Hour, this must get top priority. That is one point.

Another point I would like to raise is that on receipt of the notice, etc., the person presiding over the Assembly—

அதாவது தங்களைப்பற்றி இப்படி ஒரு தீர்மானம் இருந்தாலும், இந்தத் தீர்மானம் இன்றைக்கு லிஸ்டில் போடப்பட்டிருப்பதன் காரணமாக தாங்களே தலைமை தாங்கிக் கொண்டிருக்கும்பொழுது தாங்களே இந்த மோஷனை வோட்டுக்கு விடலாம். ஏனென்றால்